திருத்துறைப்பூண்டி நகராட்சியின் நகர்மன்றக் கூடத்தில் 31–05–2019 வெள்ளிக் கிழமை மாலை தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட
இயல்பு கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை: திரு. த.பாஸ்கரன்.,
தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

| பொருள் எண் | பொருள்கள் விபரம் | நகர்மன்றத் தீர்மானம் | |
|---|---|---|---|
| | | தீர்மானம் எண் | விபரம் |
| 1 | திருத்துறைப்பூண்டி நகராட்சியில் கஜா புயல் பாதிப்பு காரணமாக வார்டு எண் 21 பெரியநாயகிபுரம் மற்றும் வார்டு எண் 23 சாமியப்பா நகர் ஆகிய இடங்களிலுள்ள கழிவறைகள் பழுதடைந்துள்ளதால், அதனை பழுதுபார்த்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.35இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 375/ 2019/இ1** | 01 | பதிவு செய்யப்பட்டது. |
| 2 | திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள ஏ.சி.சீட் கடைகளில் கடை எண் 01 முதல் 08 வரை மற்றும் உணவு விடுதி எண் 01, கடை எண் 05, 06 மற்றும் பழைய பேருந்து நிலையத்தில் கடை எண் 01, 04, 05 ஆகியவைகளுக்கு அரசாணை (நிலை) எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007–ன் அறிவுறுத்தலின்படி, 9 ஆண்டுகள் நிறைவடைந்த கடைகளுக்கு தற்போதைய அங்காடி மதிப்பீட்டின் அடிப்படையில் குத்தகை வாடகை மறு நிர்ணயம் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்கள் மற்றும் அவர்களது கண்காணிப்புக்குழுவினரால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் அங்கீகரிக்கலாம் | 02 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப் பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | 2. தற்போதைய குத்தகைதாரர்களுக்கு 9 ஆண்டுகளுக்கு குத்தகை நீட்டிப்பு வழங்கலாம்.<br>3. மறு நிர்ணயம் செய்யப்பட்ட வாடகைத் தொகையினை குத்தகைதாரர் ஒப்புக்கொள்ளாத பட்சத்தில் அவ்வினத்தை பொது ஏலம் கோர மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>**(ந.க.எண் 6456/ 2016/அ2)** | | |
| **3** | திருத்துறைப்பூண்டி நகராட்சியின் கணிணி வசூல் மையத்தில் செயல்பட்டு வரும் VPN Live ,இணைப்பிற்கு (BSNL) 01.07.2018 முதல் 31.03.2019 வரை உள்ள காலங்களுக்கு கட்டணமாக தொகை ரூ.1,44,886/– (ரூபாய் ஒரு இலட்சத்து நாற்பத்தி நான்காயிரத்து எண்ணூற்று எண்பத்தியாறு மட்டும்) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் தஞ்சாவூர் அவர்களது மின்னஞ்சல் கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் பட்டியலின்படி சென்னை BSNL நிறுவனத்திற்கு உடனடியாக செலுத்தும்படி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி சென்னை BSNL நிறுவனத்திற்கு தொகை ரூ.1,44,886/– தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வழங்கியதை ஏற்றுக்கொள்ளலாம்.<br>**(ந.க.எண் 650/ 2019/இ2** | **03** | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப் பட்டது. |
| **4** | திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு சொந்தமான மீன் நாளங்காடி மற்றும் கசாப் கடைகளின் குத்தகை காலம் 31.03.2019–ஆம் தேதியுடன் முடிவடைவதால் மேற்படி கடையின் குத்தகைதாரர் செலுத்தி வரப்பெற்ற வருடாந்திர குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து மேலும் ஓராண்டுக்கு 01.04.2019 முதல் 31.03.2020 வரை குத்தகை உரிமத்தினை புதுப்பித்து வழங்குமாறு வரப்பெற்ற விண்ணப்பத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது. | **04** | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப் பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>வ.எண்</th><th>குத்தகை இனம்</th><th>குத்தகைதாரா் பெயா் (ம) முகவரி</th><th>2018–19ஆம் ஆண்டு குத்தகை தொகை ரூ.</th><th>5% உயா்வுக்குப் பின் ஆண்டு குத்தகை தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>மீன் நாளங்காடி மற்றும் கசாப் கடைகளில் கட்டணம் வசூல் செய்யும் உரிமை</td><td>எஸ்.கணேசன்,<br>த/பெ.டி.ஆர்.சம்மந்தம்,<br>பொன்னையன் செட்டித் தெரு,<br>திருத்துறைப்பூண்டி</td><td>1,93,000/–</td><td>2,02,656/–</td></tr>
</table>
<br>
அலுவலக குறிப்பு:<br>
அரசாணை எண் 181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.09.2008–ல் வழங்கப்பட்டுள்ள அறிவுரையை பின்பற்றி ஏற்கனவே செலுத்தி வரப்பெற்ற வருடாந்திர குத்தகை தொகையில் 5% உயா்வு செய்து 01.04.2019 முதல் 31.03.2020 வரை அங்கீகரித்து குத்தகை தொகை நிர்ணயம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
<br>
(ந.க.எண் 6966/ 2017/அ2)
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>5</td>
<td>திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு சொந்தமான ஆடு அறுக்கும் தொட்டிக்கான கட்டணம் வசூல் செய்யும் உரிமைக்கான குத்தகை காலம் 31.03.2019–ஆம் தேதியுடன் முடிவடைவதால் மேற்படி கடையின் குத்தகைதாரா் செலுத்தி வரப்பெற்ற வருடாந்திர குத்தகை தொகையில் 5% உயா்வு செய்து மேலும் ஓராண்டுக்கு 01.04.2019 முதல் 31.03.2020 வரை குத்தகை உரிமத்தினை புதுப்பித்து வழங்குமாறு வரப்பெற்ற விண்ணபத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.</td>
<td>05</td>
<td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

| வ.எண் | குத்தகை இனம் | குத்தகைதாரர் பெயர் (ம) முகவரி | 2018–19ஆம் ஆண்டு குத்தகை தொகை ரூ. | 5% உயர்வுக்குப் பின் ஆண்டு குத்தகை தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | ஆடு அறுக்கும் தொட்டிக்கான கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | எஸ்.பசுபதி கணேஷ், த/பெ.சோமசுந்தரம், வடக்கு இராமமடத் தெரு, திருத்துறைப்பூண்டி | 37,000/– | 38,856/– |

**அலுவலக குறிப்பு:**

அரசாணை எண் 181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.09.2008–ல் வழங்கப்பட்டுள்ள அறிவுரையை பின்பற்றி ஏற்கனவே செலுத்தி வரப்பெற்ற வருடாந்திர குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து 01.04.2019 முதல் 31.03.2020 வரை அங்கீகரித்து குத்தகை தொகை நிர்ணயம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண் 6966/ 2017/அ2)**

<table>
<tr>
<td>6</td>
<td>
திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலைய உணவு விடுதி எண் 02–ன் குத்தகை காலம் 31.03.2019–ஆம் தேதியுடன் முடிவடைவதால் மேற்படி கடையின் குத்தகைதாரர் செலுத்தி வரப்பெற்ற வருடாந்திர குத்தகை தொகையில் 15% உயர்வு செய்து மேலும் மூன்றாண்டுகளுக்கு 01.04.2019 முதல் 31.03.2022 வரை குத்தகை உரிமத்தினை புதுப்பித்து வழங்குமாறு வரப்பெற்ற விண்ணபத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>குத்தகை இனம்</th><th>குத்தகைதாரர் பெயர் (ம) முகவரி</th><th>2018–19ஆம் ஆண்டு குத்தகை தொகை ரூ.</th><th>5% உயர்வுக்குப் பின் ஆண்டு குத்தகை தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>பழைய பேருந்து நிலைய உணவு விடுதி எண் 02</td><td>மு.சண்முகம்,<br>த/பெ.முத்துக்கண்ணு,<br>சிங்களாந்தி தமிழர் தெரு,<br>திருத்துறைப்பூண்டி</td><td>7171/–</td><td>8247/–</td></tr>
</table>
அலுவலக குறிப்பு:<br>
அரசாணை எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007–ல் வழங்கப்பட்டுள்ள அறிவுரையை பின்பற்றி ஏற்கனவே செலுத்தி வரப்பெற்ற வருடாந்திர குத்தகை தொகையில் 15% உயர்வு செய்து 01.04.2019 முதல் 31.03.2022 வரை அங்கீகரித்து குத்தகை தொகை நிர்ணயம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
<br>
(ந.க.எண் 648/ 2013/அ2)
</td>
<td>06</td>
<td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 7 | திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் தொலைகாட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்திடவும், இராமமடத் தெருவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பயணிகள் நிழலகத்தில் விளம்பர பலகைகள் வைத்து விளம்பரம் செய்யும் உரிமைக்கு குத்தகை காலம் 31.03.2019– ஆம் தேதியுடன் முடிவடைவதால் மேற்படி கடையின் குத்தகைதாரர் செலுத்தி வரப்பெற்ற வருடாந்திர குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து மேலும் மூன்றாண்டுகளுக்கு 01.04.2019 முதல் 31.03.2020 வரை குத்தகை உரிமத்தினை புதுப்பித்து வழங்குமாறு வரப்பெற்ற விண்ணப்பத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது. | 07 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப் பட்டது. |

| வ. எண் | குத்தகை இனம் | குத்தகைதாரர் பெயர் (ம) முகவரி | 2018–19ஆம் ஆண்டு குத்தகை தொகை ரூ. | 5% உயர்வுக்குப் பின் ஆண்டு குத்தகை தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | புதிய பேருந்து நிலையத் தில் தொலைக் காட்சி பெட்டி வைத்து விளம் பரம் செய்திடவும், இராமமடத் தெருவில் புதிதாக அமைக்கப் பட்டுள்ள பயணிகள் நிழலகத்தில் விளம்பர பலகைகள் வைத்து விளம்பரம் செய்யும் உரிமை | மூ.கல்வி பிரியன் நீதி ராஜா, த/பெ. மூர்த்தி, 45.தெற்கு இராமமடத் தெரு, திருத்துறைப்பூண்டி | 41400/– (9 மாதங் களுக்கு) | 57960/– |

<table>
<tr>
<td></td>
<td>
அலுவலக குறிப்பு:
அரசாணை எண் 181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.09.2008—ல் வழங்கப்பட்டுள்ள அறிவுரையை பின்பற்றி ஏற்கனவே செலுத்தி வரப்பெற்ற வருடாந்திர குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து 01.04.2019 முதல் 31.03.2020 வரை அங்கீகரித்து குத்தகை தொகை நிர்ணயம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண் 782/ 2013/அ2)
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>8</td>
<td>
திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சரக்குகள் ஏற்றிவரும் வாகனங்களுக்கும், தெரு ஓரங்களில் தள்ளு வண்டி மற்றும் சைக்கிள்களில் வியாபாரம் செய்யும் இனங் களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமை—ன் குத்தகை காலம் 31.03.2019—ஆம் தேதியுடன் முடிவடைவதால் மேற்படி கடையின் குத்தகைதாரர் செலுத்தி வரப்பெற்ற வருடாந்திர குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து மேலும் ஓராண்டுக்கு 01.04.2019 முதல் 31.03.2020 வரை குத்தகை உரிமத்தினை புதுப்பித்து வழங்குமாறு வரப்பெற்ற விண்ணப்பத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>குத்தகை இனம்</th><th>குத்தகைதாரர் பெயர் (ம) முகவரி</th><th>2018—19ஆம் ஆண்டு குத்தகை தொகை ரூ.</th><th>5% உயர்வுக்குப் பின் ஆண்டு குத்தகை தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சரக்குகள் ஏற்றிவரும் வாகனங் களுக்கும், தெரு ஓரங்களில் தள்ளு வண்டி மற்றும் சைக்கிள்களில் வியா பாரம் செய்யும் இனங் களுக்கு கட்டணம் வசூல் செய்யும்</td><td>எஸ்.பசுபதி கணேஷ், த/பெ.சோமசுந்தரம், வடக்கு இராமமடத் தெரு, திருத்துறைப்பூண்டி</td><td>406000/—</td><td>426300/—</td></tr>
</table>
</td>
<td>08</td>
<td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | உரிமை<br><br>**அலுவலக குறிப்பு:**<br><br>அரசாணை எண் 181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.09.2008–ல் வழங்கப்பட்டுள்ள அறிவுரையை பின்பற்றி ஏற்கனவே செலுத்தி வரப்பெற்ற வருடாந்திர குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து 01.04.2019 முதல் 31.03.2020 வரை அங்கீகரித்து குத்தகை தொகை நிர்ணயம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**(ந.க.எண் 6966/ 2017/அ2)** | | |
| **9** | இந்நகராட்சிக்கு சொந்தமான டிராக்டருடன் கூடிய குடிநீர் டேங்கர் வாகனம் எண் த.நா.50டி–9878–ன் முன் பக்க இரண்டு டயர் மற்றும் டியூப் மற்றும் டிஸ்க் தேய்ந்து அடிக்கடி பழுதுகள் ஏற்படுவதால், பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் வழங்குவதில் சிரம நிலை ஏற்பட்டுள்ளதால், மேற்படி வாகன பயன்பாட்டினை கருத்தில்கொண்டு, மேற்படி இரண்டு டயர் மற்றும் டியூப் மற்றும் டிஸ்க்––களை புதியதாக மாற்றி கொள்ளவும், அதற்கான செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br>**1.** அனுமதியளிக்கலாம்<br>**2.** தற்போது தேர்தல் நடத்தை விதி அமுலில் இருப்பதாலும், கோடைக்காலம் என்பதால் பொதுமக்களுக்கு குடிநீர் தங்கு தடையின்றி வழங்கிட வேண்டியும், பணியின் அவசர அவசியம் | **09** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப் பட்டது.** |

<table>
<tr>
<td></td>
<td>கருதி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள மெஸ்ஸர்ஸ்.தர்மராஜ் ஆட்டோ கேரேஜ் திருவாரூர் நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கி, மேற்படி பணி செய்தமைக்கு பட்டியல் தொகை ரூ.19900/– வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.<br><br>(ந.க.எண் 652/ 2019/எச்1)</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>10</td>
<td><u>2019–ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12–ன் கீழ் ஏற்படுத்தப்படும் உப விதிகள்</u><br><br>தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 ன் பிரிவு 306 (28A) ன் படியும், 2019 ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12 ன் கீழ் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை (Use and throwaway plastic) சேகரித்தல் (Storage) வழங்குதல் (Supply) கொண்டு செல்லுதல் (Transport) விற்பனை செய்தல் (Sale) மற்றும் பகிர்ந்தளித்தல் (Distribution) ஆகியவற்றை தடை செய்து மேற்கண்ட துறை விதிகளை மீறுகின்ற நபருக்கு கீழ்கண்டவாறு அபராதம் விதிக்கவும் துணை விதிகள் ஏற்படுத்தலாம்.<br><br>
<table>
<tr><td>1.</td><td>(i)</td><td><u>செயலாக்க அதிகாரி</u>.<br>நகராட்சிப் பகுதிகளில் செயலாட்சி அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவார்.</td></tr>
<tr><td></td><td>(ii)</td><td><u>ஆய்வு நடத்தும் அதிகாரி.</u><br>ஆய்வு நடத்தும் அதிகாரி எனப்படுபவர்கள் நகராட்சிப் பகுதிகளில் துப்புரவு பணி மேற்பார்வையாளர், துப்புரவு ஆய்வாளர் அல்லது துப்புரவு அலுவலர் மற்றும் ஆணையரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவர்.</td></tr>
<tr><td></td><td>(iii)</td><td><u>மேல்முறையீட்டு அலுவலர்</u><br>இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துகளில் மேல் முறையீட்டு அலுவலர் ஆணையரே ஆவார்.</td></tr>
<tr><td></td><td>(iv)</td><td><u>தண்டனைகள் விதிக்கும் முறைகள்</u></td></tr>
</table>
</td>
<td>10</td>
<td>அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | இந்த உப விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளை மீறுபவர்களுக்கு முதல்முறை இரண்டாம் முறை மற்றும் மூன்றாம் முறையான குற்றத்திற்கு அட்டவணை 2ல் கண்டுள்ளவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அபராதத்தை குற்றம் நடைபெறுகின்ற இடத்திலேயே (Spot Fine) வசூலிக்கப்படுவதுடன் தடை செய்யப்பட்ட நெகிழிகள் பறிமுதல் செய்யப்படும். நான்காவது முறையாக மீறுபவருக்கு உடனடியாக தொழில் உரிமம் இரத்து செய்யப்படும். | | | |
| | <u>2.</u> | <u>வர்த்தக நிறுவனங்களின் வகைப்பாடு</u> | | | | |
| | | (i) | மொத்தமாக (Whole sale) சேமித்தல் / வழங்குதல் / கொண்டு செல்லுதல் / விற்பனை செய்தல் / பகிர்ந்தளித்தல். | | | |
| | | (ii) | வணிக வளாகங்கள், துணிக்கடைகள் பல்பொருள் அங்காடிகள், திரை அரங்குகள், திருமண மண்டபங்கள், மதுபான கூடங்கள், தொழிற்சாலைகள் , பள்ளி கல்லூரி நிறுவனங்கள் மற்றும் பெரிய வணிக நிறுவனங்கள். | | | |
| | | (iii) | மளிகை கடைகள், மருந்து கடைகள், பழக்கடைகள், காய்கறி கடைகள், இறைச்சி மற்றும் மீன்கடைகள் முதலானவைகள், | | | |
| | | (iv) | சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோரக்கடைகள் மற்றும் இதர வணிக நிறுவனங்கள் . | | | |
| | <u>3.</u> | <u>இந்த துணை விதியை மீறினால் செலுத்தும் அபராதம்</u><br>இந்த துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்கு பின்பும் வழங்கப்படும் எச்சரிக்கை காலம் 30 நாட்கள் ஆகும். அதற்கும் பிறகு இந்த துணை விதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணைப்படி இந்த துணை விதி மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராத தொகையுடன் | | | | |

| | |
|---|---|
| | தண்டிக்கப்படுவார் (துணை விதிகளை மீறும் யாராவது ஒருவர் அல்லது மாசு படுத்துவர்). |
| 4 | அட்டவணை II –ல் குறிப்பிட்டபடி அபராத தொகை கட்ட இயலவில்லை அல்லது மறுத்தாலோ எனில் அவருக்கு எதிராக கடையை/நிறுவனத்தை அல்லது குடோனைப் பூட்டி முத்திரை இடுவதுடன் நகர காவல் சட்டம் / இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம் /மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 /பொது சுகாதார சட்டம் 1939 ன்படி வழக்கு மற்றும் மேல்நடவடிக்கை எடுக்கப்படும். |
| 5 | <u>மேல் முறையீட்டுக்கு உரிமை</u><br>திருத்துறைப்பூண்டி நகராட்சியின் இந்த துணை விதிகளில் பாதிப்படைந்த யாரும் ஆணையாளருக்கு மேல் முறையீடு செய்ய உரிமையுள்ளவர்கள்ஆவர். இந்த துணை விதிகள் திருத்துறைப்பூண்டி நகர் மன்றத்தின் உரிய ஒப்புதல் பெற்று நடைமுறைக்கு வந்துள்ளன. |
| 6. | தண்டனைகள் விபரம் |

அட்டவணை II

பிரிவு 306 (28–A) –ன்படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள்

| வ. எண் | குற்றங்கள் | முதன் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் ரூ. | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத் தண்டம் ரூ. | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் ரூ. |
|---|---|---|---|---|
| 1. | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேமித்தல், வழங்குதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 25,000/– | 50,000/– | 1,00,000/– |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>2</td><td>வணிக வளாகங்கள், துணிக் கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத் தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல்</td><td>10,000/-</td><td>15,000/-</td><td>20,000/-</td></tr>
<tr><td>3.</td><td>மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன் படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல்</td><td>1000/-</td><td>2000/-</td><td>5000/-</td></tr>
<tr><td>4</td><td>சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல்</td><td>100/-</td><td>200/-</td><td>500/-</td></tr>
</table>
அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
<u>(ந.க.எண்.880/2019/எச்1)</u>
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>11</td>
<td>இந்நகராட்சியில் வார்டு எண் 1 முதல் 10 மற்றும் 22, 24 ஆகிய 12 வார்டுகளிலுள்ள தெருக்களில் துப்புரவு பணியை தனியார் பங்களிப்பு மூலம் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி விளம்பரத்தினை வெளியிட சென்னை தலைமை செயலகம், செய்தி மக்கள் தொடர்பு துறை நாள் 20.02.2019-ன்படி கடிதம் அனுப்பப்பட்டதில், மேற்படி விளம்பரத்தினை சென்னை மார்க் மீடியா கமினிகேஷன் விளம்பர நிறுவனம் மூலம் தினமலர் நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு விளம்பர கட்டணத் தொகை ரூ.4252/-ஐ வழங்கிட பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி விளம்பர கட்டணத் தொகை ரூ.4252/-ஐ சென்னை மார்க் மீடியா கமினிகேஷன் விளம்பர நிறுவனத்திற்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.</td>
<td>11</td>
<td>அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>அலுவலக குறிப்பு: அனுமதியளிக்கலாம்<br>(ந.க.எண் 1716/ 2017/எச்1)</td><td></td><td></td></tr>
<tr><td>12</td><td>இந்நகராட்சி பொதுசுகாதாரப் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு கீழ்க்காணும் இனங்களுக்கு 2019–20ம் நிதி ஆண்டிற்கு உத்தேச செலவினத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்திட வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><td>வ.எண்</td><td>பொருள் விபரம்</td><td>உத்தேச நிதி ஒதுக்கீடு தொகை (ரூ.இலட்சத்தில்)</td></tr>
<tr><td>1</td><td>பொதுசுகாதாரப் பிரிவு வாகனங்கள் பராமரித்தல், தகுதி சான்று பெற காப்பீட்டு தொகை செலுத்துதல் மற்றும் பழுதுநீக்கப் பணிகள் மேற்கொள்ளுதல் ஆகியவைகளுக் கான செலவினத் தொகை</td><td>6.00</td></tr>
<tr><td>2</td><td>பொறியியல் பிரிவு மற்றும் பொதுசுகாதாரப் பிரிவு வாகனங்கள், புகை மருந்து தெளிப்பான் மற்றும் ஜெனரேட்டர்களுக்கு எரிபொருள் செலவினங்களுக்கு</td><td>7.00</td></tr>
<tr><td>3</td><td>துப்புரவு தளவாட சாமான்கள், கிருமி நாசினிகள், நீர்த்த சுண்ணாம்பு, பிளீச்சிங் பவுடர் மற்றும் இதர தொற்று நோய் நீக்கும் மருந்துகள் ஆகியவை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களில் வாங்கும் செலவினங்களுக்கு</td><td>8.00</td></tr>
<tr><td>4</td><td>கொசுப்புழு மருந்து, கொசு ஒழிப்பு புகை தெளிப்பான் மருந்துகள் வாங்கிட ஆகும் செலவினங்களுக்கு அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களில் வாங்கி கொள்ள</td><td>4.00</td></tr>
<tr><td>5</td><td>இந்நகராட்சி துப்புரவு பணியாளர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோருக்கு சீருடைகள், காலணிகள்</td><td>2.00</td></tr>
</table></td><td>12</td><td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப் பட்டது.</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கவும், மருத்துவ முகாம் நடத்திட ஆகும் செலவினங்களுக்கு</td><td></td></tr>
<tr><td>6</td><td>திடக்கழிவு மேலாண்மை விதி 2016 செயல்படுத்துதல் உரக்கிடங்கு பராமரிப்பு. விழிப்புணர்வு மற்றும் முகாம்கள் பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் மருந்துகள் வாங்கிட ஆகும் செலவினங்களுக்கு</td><td>4.00</td></tr>
</table>
அலுவலக குறிப்பு:
1) மன்றம் வரிசை எண் 1 முதல் 6 வரை உள்ள இனங்களை அங்கீகரிக்கலாம்
2) 2019–20ம் ஆண்டுடிற்கு 31.00இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து மன்றம் அனுமதிக்கலாம்.
<u>ந.க.எண் 1202/2019/எச்1)</u>
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>13</td>
<td>
தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019, விதி 23–ன்படி 01.04.2019 முதல் புதிதாக இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியிலுள்ள பதிவுப்பெற்ற கட்டிட வரைவாளர்கள், பொறியாளர்கள், கட்டமைப்பு பொறியாளர்கள், கட்டிட அபிவிருத்தியாளர்கள், தரத் தணிக்கையாளர்கள், நகரமைப்பு வல்லுனர்கள் மற்றும் அபிவிருத்தியாளர்கள் ஆகியோர்களை இந்நகராட்சி பரிசோதனைக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பதிவு செய்ய கீழ்க்கண்டுள்ளவாறு பரிசோதனைக்குழு அமைக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>உறுப்பினர்கள்</th><th>உறுப்பினர் எண்ணிக்கை</th></tr>
<tr><td>1</td><td>நகராட்சி ஆணையர்</td><td>1</td></tr>
<tr><td>2.</td><td>நகராட்சி பொறியாளர்</td><td>1</td></tr>
<tr><td>3.</td><td>நகரமைப்பு ஆய்வாளர்</td><td>1</td></tr>
</table>
அலுவலக குறிப்பு:
1) பரிசோதனைக்குழு அமைக்க மன்றம் அனுமதிக்கலாம்.
2) 2019 நாடாளுமன்ற தேர்தல் நடத்தை விதி நடைமுறையில் இருந்ததால் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பரிசோனைக்குழு அமைத்ததை மன்றம் ஏற்கலாம்.
</td>
<td>13</td>
<td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | <u>ந.க.எண் /2019/எப்1)</u> | | |
| 14 | திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரை நாள் 16.05.2019–ல் திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான சாலையோரங்களிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க, உதவி கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலைத் துறை திருத்துறைப்பூண்டி அவர்களின் 07.06.2019 மற்றும் 08.06.2019 ஆகிய இரண்டு தினங்கள் மேற்கண்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற ஒத்துழைப்பு கோரியுள்ளார். எனவே, நெடுஞ்சாலைத் துறையுடன் சேர்ந்து ஆக்கிரமிப்பு அகற்ற ஆகும் செலவுகள் பொதுமக்களுக்கு ஒலி பெருக்கி மூலம் விளம்பரம் செய்யவும் மற்றும் இதர செலவுகள் செய்துக்கொள்ள உத்தேச செலவினம் ரூ.1,00,000/– மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு:<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>2) ஆக்கிரமிப்புக்கு ஆகும் செலவுகளை பொது நிதியிலிருந்து செய்துக்கொள்ள அனுமதிக்கலாம்.<br><br><u>ந.க.எண் /2019/எப்1)</u> | 14 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப் பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| 15 | அரசாணை எண் 151, நிதி (படிகள்) துறை நாள் 20.05.2019–ல் தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தற்போது பெற்றுவரும் அகவிலைப்படியினை 3% உயர்த்தி (9% லிருந்து 12% ஆக) 1, ஜனவரி–2019 முதல் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1) மன்றம் பதிவு செய்யலாம்.<br>2) தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 3% அகவிலைப் படியினை உயர்த்தி வழங்க அரசாணையில் ஆணைப் பிறப்பிக்கப்பட்டுள்ளதால், பொது நிதியிலிருந்து 1, ஜனவரி–2019 முதல் ஏப்ரல்–2019 வரை அகவிலைப்படி நிலுவை தொகை வழங்க அனுமதிக்கலாம்.<br><u>ந.க.எண் /2019/எப்1)</u> | 15 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப் பட்டது. |
| 16 | திருத்துறைப்பூண்டி நகராட்சியின் கணிணி பிரிவு மற்றும் அனைத்துப் பிரிவுகளுக்கும் ஆன் லைன் வழியாக தான் அலுவலக பணிகள் முழுவதும் நடைபெறுகின்றன. இந்நிலையில் தற்பொழுது செயல்பாட்டில் இருந்து வரும் BSNL Broad band இணைப்பு பல்வேறு காரணங்களால் சரிவர இயங்காமல் பணிகள் பாதிப்பு அடைவதால் தனியார் நிறுவனமான SPVS Communication–ன் Alliance Broad band Service Private Limited என்ற புதிய இணைய தள இணைப்பு பெறுவதற்கு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1) நிர்வாக நலன் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதிப்பெற்று அலுவலக நடைமுறைகள் மேற்கொண்டதை மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.<br>3) இவ்விணைப்பு பயன்படுத்தும் வரை இதற்கான மாதாந்திர கட்டணத்தை பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br><u>ந.க.எண் 1342 /2019/இ2)</u> | 16 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப் பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| 17 | திருத்துறைப்பூண்டி நகராட்சியின் 2019–2020 ஆம் ஆண்டிற்கு வரவு–செலவு திட்ட அறிக்கை (Budget) மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு:<br><br>1) அனுமதிக்கலாம்.<br>2) ஆணையர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்கொண்ட அலுவலக நடவடிக்கையை மன்றம் ஏற்கலாம்.<br>3) ஜெராக்ஸ் மற்றும் பைண்டிங் செலவினங்களை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் 674 /2019/பி1) | 17 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப் பட்டது. |
| 18 | 2018–19ஆம் ஆண்டிற்கு ஒப்பந்தாரர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட வருமான வரித் தொகை மற்றும் பணியாளர்களின் மாத ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட வருமான வரித் தொகை ஆகியவற்றை பட்டய கணக்கர் மூலம் கணிணியில் பதிவேற்றம் Online Updation and TDS return filing) செய்து வருமான வரித் துறை அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கும் பொருட்டு பணியினை மேற்கொண்டமைக்கு வருமான வரித் துறையின் அங்கீகரிக்கப்பட்ட பட்டய கணக்கரான R.S.Associates நாகப்பட்டினம் நிறுவனத்திடமிருந்து ரூ.4500/–க்கான பட்டியல் வரப்பெற்றுள்ளதால் மேற்படி நிறுவனத்திற்கு தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண் 6698 /2007/பி1) | 18 | அனுமதிக்கப் பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| 19 | திருத்துறைப்பூண்டி நகராட்சியின் வேதாரண்யம் சாலையிலுள்ள உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை சுத்திகரிப்பு செய்து அகற்ற (Biomining) உரக்கிடங்கினை சர்வே செய்திட (Topographical and contour level survey) அறிக்கை பெறுவதற்கான கட்டணம் ரூ.15,000/—க்கும் இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br>1) மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியினை செய்து முடித்த இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் ஏற்கலாம்.<br>**ந.க.எண் 545 /2017/இ)** | 19 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப் பட்டது. |
| 20 | திருத்துறைப்பூண்டி நகராட்சியின் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர் திட்ட விநியோக குழாய்களில் நகரின் பல்வேறு இடங்களில் உடைப்பு ஏற்பட்டு குடிநீர் கசிவு ஏற்பட்டுள்ளதை பழுதுகள் சரி செய்ய ஆகும் மதிப்பீடு ரூ.1.00இலட்சத்திற்கும் இப்பணியினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>1) மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் பிரிவு 15—ன்கீழ் பணியினை மேற்கொண்டதையும் தொகை வழங்கியதையும் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**ந.க.எண் 546 /2019/இ)** | 20 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப் பட்டது. |
| 21 | திருத்துறைப்பூண்டி நகராட்சியில் 2019—20ஆம் ஆண்டிற்கு தேவையான குடிநீர் பராமரிப்பிற்கான உபகரணங்கள், உதிரிப்பொருட்கள் வாங்கிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00இலட்சத்திற்கும், இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**ந.க.எண் 1181 /2018/இ)** | 21 | அனுமதிக்கப் பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| 22 | திருத்துறைப்பூண்டி நகராட்சியில் கஜா புயலால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்க டோக்கன் அச்சிடப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. டோக்கன்கள் அச்சிட்டதற்கான தொகை ரூ.4074/—ஆகும். இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டி மன்றப்பொருள் வரைவு ஒப்புதலுக்கு.<br><br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**<u>ந.க.எண் 3166 /2018/இ)</u>** | **22** | **அனுமதிக்கப் பட்டது.** |
| 23 | திருத்துறைப்பூண்டி நகராட்சியின் புதிய பேருந்து நிலையத்திலுள்ள குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் (ஆர்.ஓ.பிளாண்ட்) பழுதாகி பொதுமக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குவதில் சிரமம் உள்ளதால் அதனை பழுதுபார்க்கும் பணிக்கான விலைப்புள்ளிகள் 20.05.2019 அன்று கோரப்பட்டதில் வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. மேற்கண்ட பணியினை செய்ய ஆகும் செலவினம் ரூ.36250/—க்கும், இப்பணியினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | **23** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப் பட்டது.** |

| வ.எ. | பணி விபரம் | SKS Sayee Agency, Chennai-45 Rs. | OM Sakthi Tech services, Chennai-125 Rs. | Karthiga System Engineers, Chennai-83 Rs. |
|---|---|---|---|---|
| 1 | புதிய பேருந்து நிலையத் திலுள்ள குடிநீர் சுத்தி | **36250/—** | **43000/—** | **41250/—** |

| | | | | |
|---|---|---|---|---|
| | கரிப்பு இயந்திரம் (ஆர்.ஓ. பிளாண்ட்) பழுதுபார்த்தல் | | | |

அலுவலக குறிப்பு:

1) வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான தொகைக்கு விலைப்புள்ளி வழங்கியுள்ள SKS Sayee Agency என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரியதையும், பணி உத்தரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் ஏற்கலாம்.

<u>ந.க.எண் 1117 /2019/இ)</u>

---

**24**

இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2018–19, 8–வது மாநில உயர்மட்ட குழு பரிந்துரையின் கீழ் திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு 2 எண்ணிக்கையிலான Light Commercial Vehicle வாங்கும் பணி ரூ. 11.20 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு 14.02.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்று இரண்டு ஒப்பந்தபுள்ளிகளின் விபரம் கீழ்கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எ. | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்தப்புள் ளி தொகை | சதவீதம் குறைவு/அதிக ம் |
|---|---|---|---|---|
| 1 | Krysttal Motors (P) Ltd. Salem. | ரூ.11,20,000/– | ரூ.11,04,600/– | 1.38 சதவீதம் குறைவு |
| 2 | Lakshmi Auto Diesel Works, Mettur DAM | | ரூ.10,89,930/– | 28.68 சதவீதம் குறைவு |

அலுவலக குறிப்பு:

1) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப் பீட்டைவிட 2.68

**24**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப் பட்டது.

| | | | |
|---|---|---|---|
| | சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தபுள்ளி வழங்கியுள்ள Lakshmi Auto Diesel Works, Mettur DAM என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>2) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று 18.02.2019 அன்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.<br><br>ந.க.எண் 68 /2019/இ) | | |
| 25 | திருத்துறைப்பூண்டி நகராட்சியில் 16.11.2018 அன்று வீசிய கஜா புயலினால் சேதமடைந்த மற்றும் காணாமல் போன 20W LED , 40W LED, 60W LED பிட்டிங்குகளுக்கு பதிலாக புதியதாக மாற்றவும், சேதமடைந்த 250W சோடியம் ஆவி விளக்கிற்கு மாற்றாக 90W LED Fitting பொருத்திடவும், புதிய பேருந்து நிலையம் மற்றும் இராமமடத்தெருவில் உள்ள உயர்மின் கோபுர விளக்குகளில் பழுதடைந்த சோடியம் ஆவி விளக்குகளுக்கு பதிலாக 200W LED Fitting ஆக பொருத்தவும், திருவாரூர் சாலையில் சேதமடைந்த உயர்மின் கோபுர விளக்குகளை புணரமைப்பு செய்து 200W LED விளக்கு பொருத்தவும் மற்றும் வேதாரண்யம் சாலையில் முற்றிலும் சேதமடைந்த உயர்மின் கோபுர விளக்கிற்கு பதிலாக புதியதாக மாற்றி அமைக்கவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 41.50 இலட்சமாகும். இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு:<br>1) மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>2) பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண் 3166–1 /2018/இ) | 25 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப் பட்டது. |

<table>
<tr>
<td>26</td>
<td>இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2018–19, 8–வது மாநில உயர்மட்ட குழு பரிந்துரையின் கீழ் திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு 10 எண்ணிக்கையிலான Battery Operated Vehicle வாங்கும் பணி ரூ. 18.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு 14.02.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்று நான்கு ஒப்பந்தபுள்ளிகளின் விபரம் கீழ்கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ.எ.</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>மதிப்பீடு ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை</th><th>சதவீதம் குறைவு/ அதிகம்</th></tr>
<tr><td>1</td><td>Priyam Indutries and Engineering Private Ltd.</td><td rowspan="4">ரூ.18,00,000/–</td><td>ரூ.1795000/–</td><td>0.28 சதவீதம் குறைவு</td></tr>
<tr><td>2</td><td>Arun Indian Motors</td><td>ரூ.1798000/–</td><td>0.11 சதவீதம் குறைவு</td></tr>
<tr><td>3</td><td>Neptune Automation, Erode</td><td>ரூ.1619000/–</td><td>10.06 சதவீதம் குறைவு</td></tr>
<tr><td>4</td><td>Coromandal Agro&Marine Agencies Chennai</td><td>ரூ.1617000/–</td><td>10.17 சதவீதம் குறைவு</td></tr>
</table>
<br>அலுவலக குறிப்பு:<br>
1) வரப்பெற்ற நான்கு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டைவிட 10.17 சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தபுள்ளி வழங்கியுள்ள Coromandal Agro&Marine Agencies Chennai என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br><br>
2) பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின்</td>
<td>26</td>
<td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | அனுமதி பெற்று 18.02.2019 அன்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.<br><br>**<u>ந.க.எண் 68 /2019/இ)</u>** | | |
| **27** | திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு சொந்தமான மீன்பாசி குளங்கள், பலன் தரும் மரங்கள் மற்றும் நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான மரங்கள் ஆகியவற்றை 01.07.2019 முதல் 30.06.2010 வரையுள்ள காலங்களுக்கு பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரிட நகர்மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு:<br>1) மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>2) 15.11.2018ஆம் தேதியன்று கஜா புயலின்போது மரங்கள் முழுவதும் சாய்ந்துவிட்டதால் தற்பொழுது நல்ல நிலையில் உள்ள மரங்களை கணக்கெடுக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டவுடன் மரங்களுக்கான ஏலம் தனியே விடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>3) மேற்படி ஏல நடவடிக்கைகளுக்கு மேற்கொள்ளப்படும் செலவினங்களை பொது நிதியில் செய்துகொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>ந.க.எண் 1333 /2019/அ2)</u>** | **27** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப் பட்டது.** |

| | | | |
|---|---|---|---|
| 28 | திருத்துறைப்பூண்டி நகராட்சி வேதாரண்யம் சாலையிலுள்ள உரக்கிடங்கு குப்பைகள் நிரம்பி வாகனங்கள் செல்ல இயலாத நிலையிலுள்ளதால் அதனை சமப்படுத்தி ஒதுக்கிட ஹிட்டாச்சி இயந்திரம் கொண்டு பணி செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.50000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இப்பணியை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**<u>ந.க.எண் 1185 /2019/இ1)</u>** | 28 | அனுமதிக்கப் பட்டது. |
| 29 | திருத்துறைப்பூண்டி நகராட்சி அலுவலகத்தில் கஜா புயலினால் சேதமடைந்த அலுவலக கட்டிடத்திலுள்ள கணிணி அறை சேதமடைந்ததை கீழ் தளத்திற்கு மாற்றியதில் மின் இணைப்புக்கான UPS வயரிங் செய்வதற்கும், பழைய அலுவலக கட்டிடத்தில் வயரிங் பணிகள் செய்யவும்,வார்டுகளின் மின் இணைப்பு கொடுக்கப்படாத குடிநீர் மின் இணைப்பு கொடுக்கவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.50000/–க்கும் இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**<u>ந.க.எண் 3166–7 /2018/இ1)</u>** | 29 | அனுமதிக்கப் பட்டது. |
| 30 | திருத்துறைப்பூண்டி நகராட்சியிலுள்ள 24 வார்டுகளில், கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்டத்தின்கீழ் குடிநீர் இணைப்புகள் இல்லாத 2968 எண்ணிக்கையில் சொத்துவரி அடிப்படையிலான குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கும் பணி TUFIDCO சென்னை நிறுவனத்தின் மூலம் வட்டியில்லா கடன் (ம) நகராட்சி நிதி பங்களிப்புடன் ரூ.102.00 இலட்சம் மதிப்பீட்டில் 06.02.2019–ல் பணி உத்தரவு வழங்கப்பட்டு இணைப்புகள் வழங்கும்பணி நடவடிக்கையில் உள்ளது.<br><br>மேலும் குடிநீர் வீட்டு இணைப்புகள் வழங்குவதில் முன்னர் உள்ள நடைமுறைகளை எளிதாக்கி வீட்டு உபயோக குடிநீர் இணைப்பிற்கான டெபாசிட் தொகை ரூ.5000/– வணிக உபயோகத்திற்கான டெபாசிட் தொகை ரூ.7000/– மற்றும் தொழிற்சாலை உபயோகத்திற்கான டெபாசிட் தொகை ரூ.10000/– எனவும், குடிநீர் இணைப்பிற்கான அனைத்து பொருட் செலவு மற்றும் அதற்கான பணியாட்களின் சம்பளம் போன்றவற்றின் செலவுத் தொகை ரூ.3523/–ஐ சம்மந்தப்பட்ட குடியிருப்பு வணிக நிறுவனம் மற்றும் தொழிற்சாலை சொத்து வரி விதிப்புடன் இணைத்து 10 சம தவணைகளில் (5 ஆண்டுகள்) வசூல் | 30 | பார்வையிட்டு அனுமதிக்கப் பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>
செய்திட அறிவுறுத்தி வரப்பெற்ற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.13277/2017/குவ1 நாள் 27.06.2018 மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>
மேலும் முன்னர் உள்ள குடிநீர் திட்ட உப விதிகளில் உரிய திருத்தம் செய்து வீட்டு உபயோக வைப்புத் தொகையினை 10 சம தவணைகளிலும் மற்றும் குடிநீர் இணைப்பு செலவினங்கள் ஆகியவற்றை சொத்து வரியுடன் இணைத்து வசூல் செய்யும் நகரமைப்புகளுக்கான மையப்படுத்தப்பட்ட இணையவழி மென்பொருளில் (Urban Tree Software) உரிய திருத்தங்கள் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
அலுவலக குறிப்பு:<br>
மேற்கண்ட குடியிருப்பு உபயோகம், வணிக நிறுவனம் மற்றும் தொழிற்சாலை ஆகியவற்றிற்கு உரிய குடிநீர் வைப்புத் தொகை மற்றும் குடிநீர் இணைப்பிற்கான செலவினம் சொத்து வரி விதிப்புடன் இணைத்து 10 சம தவணைகளில் வசூல் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>
<u>ந.க.எண் 1596 /2018/இ1)</u>
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>31</td>
<td>
நநகராட்சி குடிநீர் வழங்கல் நிதி 2019–20ன் கீழ் திருத்துறைப்பூண்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட 6 மினிபவர் பம்பு அறைகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்யும் பணி ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு 11.03.2019 அன்று ஒப்பந்த புள்ளி கோரப்பட்டது. அதன்படி வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><td>வ.எ.</td><td>ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்</td><td>பணியின் பெயர்</td><td>மதிப்பீடு ரூ.</td><td>ஒப்பந்தப் புள்ளி மதிப்பீடு ரூ.</td><td>சதவீதம்</td></tr>
<tr><td>1</td><td>S.மங்கையர்கரசி</td><td>திருத்துறைப்பூண்டி நகராட்சி எல்லைக் குட்பட்ட</td><td>84,442.20/–</td><td>84,324/–</td><td>0.14% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
</table>
</td>
<td>31</td>
<td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>2</td><td>S. மாரியம்மாள்</td><td>6 மினி பவர் பம்பு அறை களில் ஏற்பட்டுள்ள பழுதுகள் சரி செய்யும் பணி</td><td></td><td>85,004/–</td><td>0.67% மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>
<br>
அலுவலக குறிப்பு:<br>
வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் கண்டுள்ள திருமதி. S.மங்கையர்க்கரசி, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.14% குறைவான தொகைக்கு வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>
<br>
<u>ந.க.எண் 329 /2019/இ1)</u>
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>32</td>
<td>
திருத்துறைப்பூண்டி நகராட்சியில் ஐ.யு.டி.எம் 2018 – 19 திட்டத்தின் கீழ் கசடு கழிவு மற்றும் கழிவுநீர் மேலாண்மை, கழிவுநீர் சுத்திகரிப்பு மையம் ரூ.185.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 20.03.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கான விளம்பர அறிவிப்பு தினபூமி நாளிதழ் மற்றும் Deccan Chronicle ஆங்கில நாளிதழில் 06.03.2019 அன்று வெளியிடப்பட்டுள்ளது. அதற்கான விளம்பர கட்டணத் தொகை ரூ.50,450/– மார்க் மீடியா கம்யூனிகேசன்ஸ், சென்னை – 6. என்ற நிறுவனத்திற்கு வழங்கிடவும், இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<br>
அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
(ந.க.எண்.3770/2018/இ1)
</td>
<td>32</td>
<td>அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| **33** | திருத்துறைப்பூண்டி நகராட்சி எல்லைக்குள் வரிவிதிப்பு செய்யப்பட்டு குடிநீர் இணைப்பு பெறாத வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகளை டுபிட்கோ நிறுவன கடன் உதவியுடன் 2968 குடிநீர் இணைப்புகள் வழங்க 31.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் 10.01.2019 ந் தேதிய 'Deccan Chronical' ஆங்கில நாளிதழ் மற்றும் 'மக்கள் குரல்' தமிழ் நாளிதழ் ஆகியவற்றில் வெளியிட்டதற்கான கட்டணத் தொகை ரூ.71,820/—ம் Bright Advertising, Chennai—6 என்ற நிறுவனத்திற்கு வழங்கிடவும், இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.1596/2018,இ1) | **33** | **அனுமதிக்கப் பட்டது.** |

ஒம்/த.பாஸ்கரன்
தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

/உண்மை நகல்/